THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Saturday, the 8th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Pension to teachers

* 160 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether the Government have ordered the payment of pension to all teachers who have retired irrespective of the date of their retirement; and

(*b*) if so, the details therefor?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(ஆ) 1—4—1955 தேதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியத் தாரத்தினருக்கு 1—3—1968 தேதி முதற்கொண்டு ஓய்வூதிய நன்மைகளை நிலுவைத் தொகைகள் பெறும் உரிமையின்றி நீட்டித்து கல்வித் துறையில் 24—9—1968 தேதியன்று வெளியான 1505-ம் எண் ஆணையில் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. 1—4—1955-க்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்க்கு ஓய்வூதியம் வழங்க ஒப்பளிப்பதற்காக விதிகளில் ஏற்கெனவே விரித்துறை உள்ளது.

THIRU G. KRISHNAMOORTHY : Have the Government received any report that this pension has not been paid so far?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : எந்தெந்தத் துறையிலே யார் யாருக்கு விதி விலக்குக் கொடுத்துப் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று 1955-ம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம்; எங்கே கொடுக்கவில்லை என்று தனியாகக் குறிப்பிட்டுக் காட்டினால் அதற்கு ஆவன செய்யலாம்.

THIRU G. KRISHNAMOORTHY : The question is that the G.O. has not been implemented by the Department and no payment has been made. That is the information, Sir. Have the Government received any report regarding the delay in payment, Sir?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதற்கேற்ப சர்வீஸ் ரிஜிஸ்டர் பார்த்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்ற தகவல் தெரிந்த பிறகுதான் கொடுக்க முடியும். அதில் காலதாமதம் ஆகியிருக்கிறதா என்று தெரியவில்லை.